பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 01 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 76-ஆவது குடியரசு தினத்தையொட்டி, தில்லி கடமைப்பாதையில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

2. அரசியல் சாசனத்தை உருவாக்க அரும்பாடுபட்டவர்களுக்கு குடியரசு தினத்தில் தலைவணங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என் ரவி தேசியக்கொடியை ஏற்றிவைத்து, முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

4. தமிழகத்தில் வீரதீர செயல்களுக்கான அண்ணா பதக்கம், மத நல்லிணக்கத்திற்கான கோட்டை அமீர் பதக்கம் உள்ளிட்ட பதக்கங்களை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷுக்கு எதிராக இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<<>>>>>>

நாட்டின் 76வது குடியரசு தினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. புதுதில்லி கடமைப்பாதையில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபாவோ சுவியாந்தோ இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

*<u>(வெய்ட் - பேண்டு சவுண்ட் - 20 செகண்ட்ஸ்)</u>*

நாட்டின் ராணுவ வலிமையை பறைசாற்றும் வகையில், முப்படைகளின் அணிவகுப்பு அமைந்தது. பீரங்கிகள், நவீன ரக ஏவுகணைகள் உள்ளிட்டவையும் அணிவகுப்பில் இடம்பெற்றன. இந்தோனேஷிய ராணுவ வீரர்களும் குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்டனர். தேசிய மாணவர் படையின் மகளிர் பிரிவினரின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் இடம்பெற்றதுடன், பாதுகாப்புப்படையினரின் மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்ச்சியும் பார்வையாளர்களை கவரும் வகையில் அமைந்தது.

பின்னர் நடைபெற்ற வான் சாகச நிகழ்ச்சி பொது மக்களை பெரிதும் ஈர்த்தது.

இந்த விழாவில் குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மற்றும் மத்திய அமைச்சர்கள், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

முன்னதாக, தில்லியில் உள்ள போர் நினைவு சின்னத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அரசியல் சாசனத்தை உருவாக்க அரும்பாடுபட்டவர்களுக்கு தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

வலிமையான, வளமான இந்தியாவை உருவாக்கவும், அரசியல் சாசன அம்சங்களை பேணி காக்கவும் உறுதி ஏற்போம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்திலும் குடியரசு தின விழா விமரிசையாக நடைபெற்றது.

சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தேசியக் கொடியை ஏற்றி வைத்து முப்படையினர் மற்றும் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக, போர் நினைவுச்சின்னத்தில் ஆளுநர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

குடியரசு தின விழாவில், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், வீரதீர செயல் புரிந்தவர்களுக்கான அண்ணா பதக்கம், மத நல்லிணக்கத்திற்கான கோட்டை அமீர் பதக்கம், சிறந்த நெல் சாகுபடியாளருக்கான

நாராயணசாமி நாயுடு பதக்கம், மதுவிலக்கு காவல்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான காந்தியடிகள் காவலர் பதக்கம் மற்றும் சிறந்த காவல்நிலையங்களுக்கான பரிசுகளையும் வழங்கினார்.

பள்ளிக் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

தமிழக அரசுத்துறைகளின் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் ஆகாஷ்வாணி துணைத் தலைமை இயக்குநர் திருமதி வாசுகி தேசியக் கொடி ஏற்றி வைத்தார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள குடியரசு தின வாழ்த்து செய்தியில், இந்தியாவின் அனைத்து தரப்பட்ட மக்களும் சமூகநீதியும், சம உரிமையும் பெறவேண்டி உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சாசனம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட நாள் என்று தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள குடியரசு தின செய்தியில், அனைவருக்கும் நீதி, சமத்துவம், கண்ணியத்தை உறுதிப்படுத்தும் நமது அரசியல் சாசனம் செழித்தோங்க உறுதியேற்போம் என்று கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

குடியரசு தினத்தையொட்டி, மத்திய – மாநில அரசு அலுவலகங்கள், தெற்கு ரயில்வே தலைமை அலுவலகம், சென்னை உயர்நீதிமன்றம், துறைமுக பொறுப்புக்கழகம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களிலும் அந்தந்த அலுவலகங்களின் தலைமை அதிகாரிகள் தேசியக்கொடியை ஏற்றிவைத்தனர்.

சென்னை தண்டையார்பேட்டையில் நடைபெற்ற விழாவில், துறைமுக பொறுப்புக்கழகத்தின் சார்பில் அதன் தலைவர் திரு சுனில் பாலிவால், தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

பின்னர் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், சென்னை துறைமுகத்தில் உள்ள ராயல் மெட்ராஸ் கிளப் சார்பில் ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு படகு ஓட்டும் பயிற்சி அளித்து வருவதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - சுனில் பாலிவால் - 40 செகண்ட்ஸ்)*

**<<<<<<<>>>>>>**

தமிழகத்திலிருந்து பத்மஸ்ரீ விருதுக்கு மதுரை அலங்காநல்லூரை சேர்ந்த பறை இசைக்கலைஞர் திரு வேலு ஆசான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பாரம்பரிய கலைகளுக்கு மரியாதை அளித்து தம்மை தேர்வு செய்திருப்பதற்காக மத்திய அரசுக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - வேலு ஆசான் - 20 செகண்ட்ஸ்)*

**<<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - **song** - 8 நொடிகள்)*

பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவின் 14-ஆவது நாளான இன்றும் லட்சக்கணக்கானோர் திரண்டு புனித நீராடி வருகின்றனர்.

கும்பமேளா நடைபெறும் பகுதியில் இடம்பெற்றுள்ள பல்வேறு கண்காட்சிகளையும் பக்தர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

கண்காட்சியில் இடம்பெற்றுள்ள "நரேந்திர மோடி செயலி" பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்துள்ளது.

இந்த செயலின் பலன்கள் மற்றும் பல்வேறு அம்சங்கள் குறித்து பக்தர்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறப்பட்டது.

இந்த செயலியை பதிவிறக்கம் செய்தல், அதில் இடம்பெற்றுள்ள புகைப்படங்களை பார்வையிடுதல் மற்றும் புதிதாக புகைப்படங்களை பதிவேற்றம் செய்தல் போன்ற விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இந்த செயலியின்மூலம், பக்தர்கள் அரசின் பல்வேறு திட்டங்களை அறிந்துகொள்ள முடிகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இருப்பது போன்ற புகைப்படம் எடுத்துக்கொள்ளும் செல்ஃபி மையம் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*சவுண்ட் பைட் - **song** - 8 நொடிகள்)*

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷுக்கு எதிராக டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், தற்போது பேட் செய்துவரும் பங்களாதேஷ் அணி ஒரு ஓவரில், ஒரு விக்கெட் இழப்பிற்கு 4 ரன் எடுத்துள்ளது.

இந்திய மகளிர அணி இதுவரை பஙகேற்ற மூன்று லீக் போட்டிகளிலும் வெற்றிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணி இரண்டு போட்டிகளில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

---------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணி இன்று மேற்குவங்க அணியை எதிர்கொள்கிறது. மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடஙகுகிறது.

-----------

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டி இன்று நடைபெறுகிறது. இதில் இத்தாலியின் **Jannik Sinner** – ஜெர்மனியின் அலெக்சாண்டர் **Zverev** –ஐ எதிர்கொள்கிறார்.

**<<<<<<<>>>>>**

இந்திய இணையதள விளையாட்டு உருவாக்குவோர் சங்கம், வேவ்ஸ் ஓ.டி.டி. தளத்தில் இணைந்திருப்பது விளையாட்டு தொழிலின் எதிர்காலத்தை வடிவமைக்க உதவும் என தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

உலக ஒளி-ஒலி பொழுதுபோக்கு மாநாடான வேவ்ஸ்-க்கான சவால் அமர்வில் இத்றகான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<<<<>>>>>**